1969 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்ட அணைக்கட்டு கட்டுவதற் கான திட்டம் இல்லை. நிலக்கோட்டை வட்டத்தில் வளையப்பட்டி கிராமத்தில் மஞ்சமலை ஓடையின் குறுக்கே ஒரு புதிய குளத்தை வெட்டுவதற்கான திட்டத்திற்கு மதிப்பீடும், வரைபடங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.15 லட்சத்தில் இந்தப் பாசனத் திட்டத்தை நிறைவேற்று வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

Bridge across Arasalar at Sakkottai.

* 47. Q.—THIRU N. KASIRAMAN: Will the **Hon.** the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Regulator-*cum*-Road Bridge at Sakkottai, south of Kumbakonam Municipal limits, across the Arasalar is in safe condition ; and

(*b*) if not, whether there is any proposal to repair and widen it ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) ஆம்.

(இ) இவ்வினுவிற்கிடமில்லை.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனர்: இந்தப் பாலமானது 1967-ம் வருடம் வந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, திறக்கப் படாமல் அதே நிலையில் இருக்கிறது. அதைச் செப்பனிடுவதற்கும் அது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதினால் அந்தப் பாலத்தை அகலப் படுத்துவதற்கும் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது போக்கு வரத்திற்கு இடைஞ்சலாக இல்லை. பாலத்தை விரிவுபடுத்துவதற் கான உத்தேசம் தற்சமயம் இல்லை.

நெய்வேலியில் தொழிலாளர் போராட்டம்

*48 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் 1967 ஜூன், ஜூலையில் தொழிலாளர் போராட்டம் நடந்தது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம். நெய்வேலியி லுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழக நிறுவனத்தில் பணி யாற்றும் தொழிலாளர்கள் 17—7—1967 அன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) பூரிப்பூதியம், அகவிலைப் படி முதலியவை வழங்குவது குறித்து மூன்று தொழிலாளர் சங்கங்கள் 1967-ம் ஆண்டின் முற் பகுதியில் 19 கோரிக்கைகள் அடங்கிய பட்டியலைக் கொடுத்தன.